குறள் வழி

திருக்குறள் முற்றோதல் மாத மின்னிதழ்

திருவள்ளுவராண்டு 2055 பிப்ரவரி (தை)-2024 மலர்: 2 இதழ்: 2





இந்நூலைப் பெற : www.eStore.ValaiTamil.Com

அறம் சார்ந்த உங்கள் தொழில் செழிக்க **உங்கள் விளம்பரம் திருக்குறள் புரவலராக** இங்கு இடம்பெறலாம்

தொடர்புக்கு

Email: Kural.Mutrothal@gmail.com

WhatsApp: +91 7305571897

“குறள் வழி” மாத இதழ்

(தனிச்சுற்றுக்கு மட்டும்)

உலகத் திருக்குறள் முற்றோதல் இயக்கத்தின் செய்திகளை, செயல்பாடுகளை, நிகழ்ச்சிகளை, திருக்குறள் சார்ந்த உலக முன்னெடுப்புகளை, பரப்புரைகளை தாங்கி மாதம் ஒருமுறை வரும் இதழ்.

பிப்ரவரி 2024 மாத, “குறள் வழி” முதல் மாத இதழ் உங்கள் வாசிப்பிற்கு

- **To Read as a book:** https://issuu.com/kuralvazhi/docs/kuralvazhi-4
- **Magazine Page:** https://www.valaitamil.com/literature_thirukkural_kural-vazhi/

உங்கள் கருத்துகளை எங்களுக்கு எழுத, படைப்புகளை அனுப்ப : kural.mutrothal@gmail.com

Facebook Page to LIKE and SHARE: https://www.facebook.com/groups/2456301715352 51

உங்கள் மாவட்டத்தில், உங்கள் அமைப்பில் நடைபெறும் திருக்குறள் சார்ந்த நிகழ்வுகளை எங்களுக்கு அனுப்பவும். மேலும், இவ்விதழ் குறித்த உங்கள் கருத்துகளை எங்களுக்கு எழுதி அடுத்த இதழில் வாசகர் பகுதியில் இடம்பெறச் செய்யவும்.

உள்ளே...

1. ஆசிரியர் பக்கம்
2. உலகத் திருக்குறள் முற்றோதல் இயக்கம் - என்ன செய்கிறது?
3. உலகத்த திருக்குறள் முற்றோதல் இயக்கத்தின் 2024 இலக்குகள் :
4. திருக்குறள் ஐம்பெரும் விழாவிற்கு அன்புடன் அழைக்கிறோம்
5. "குறள் வழி" சனவரி மாத இதழை முதுமுனைவர் சத்திய வேல் முருகனார் வெளியிட்டார்
6. மாவட்டத் திருக்குறள் செயல்பாடுகள்திருவண்ணாமலை வட்டம்
    - 6.1. திண்டுக்கல் மாவட்டம்
    - 6.2. திருச்சி மாவட்டம்
    - 6.3. தஞ்சாவூர் மாவட்டம்
    - 6.4. தூத்துக்குடி மாவட்டம்
    - 6.5. விருதுநகர் மாவட்டம்
    - 6.6. திருவள்ளூர் மாவட்டம்
    - 6.7. கன்னியாகுமரி மாவட்டம்
    - 6.8. விருதுநகர் மாவட்டம்
    - 6.9. வேலூர் மாவட்டம்
    - 6.10. சிவகங்கை மாவட்டம்
7. கருணாகரன் நினைவு திருக்குறள் நூலகம் பேராசிரியர். திருக்குறள் க.பாஸ்கரன் அவர்களுக்கு உலகத் திருக்குறள் முற்றோதல் இயக்கத்தின் "திருக்குறள் வாழ்நாள் சாதனையாளர்" விருது.
8. ஆப்பிரிக்காவில் பேசப்படும் ஸ்வாஹிலி மொழியில் திருக்குறள் வெளியீடு.
9. கேரளத்தில் உள்ள திருக்குறள் ஞான மடம் போன்று தமிழ்நாட்டில் "திருக்குறள் வாழ்வியல் மன்றங்கள் " ஊரெங்கும் உருவாகுமா?
10. நவில்தொறும் நூல்நயம்
11. திருக்குறள் நூல்கள் அறிவோம்
12. முதல் மொழி வழங்கும் திருக்குறள் குறும்படப் போட்டி
13. புதுச்சேரி அரசுக்கு உலகத் திருக்குறள் முற்றோதல் இயக்கம் கோரிக்கை.
14. நாளொரு திருக்குறள் - நல்லதொரு பொருட்குறள்: நாளும் காணொளியாக வெளிவருகிறது.
15. புதிய முற்றோதல் மாவட்டப் பயிற்சியாளர்களுக்கு பயிற்சிக் கூட்டம் நடைபெற்றது.
16. திருக்குறள் தற்சார்பு
17. திருக்குறள் புரவலர்களுக்கு நன்றி...
18. திருக்குறள் பொது நிகழ்வுகள்
19. அயலகத் தமிழர் நாள் விழாவில் உலகத் திருக்குறள் முற்றோதல் இயக்கம்
20. அறிந்தவர்கள் தொடர்புகொள்ளவும் -UNESCO
21. "குறள் வழி " முந்தைய இதழ்களை வாசிக்க

உலகத் திருக்குறள் முற்றோதல் இயக்கம்
அரசுப் பள்ளி மாணவர்களுக்கு 1330 திருக்குறள் இலவச மனனப் பயிற்சி
(வெற்றிகரமாக முடிக்கும் மாணவர்களுக்கும் பயிற்சி சான்றிதழும்,
அரசின் முற்றோதல் திட்டத்தில் பங்கேற்க வாய்ப்பும்)
மாவட்டப் பயிற்சியாளர்கள்
செங்கல்பட்டு
அரியலூர், புதுச்சேரி
திண்டுக்கல்
தஞ்சை
தலைமைப் பயிற்சியாளர்கள்
அனைத்து மாவட்டங்களுக்கும் மாவட்டப் பயிற்சியாளர்கள் விரைவில் நியமிக்கப்படுவர்.
தேவை: மாவட்ட அளவில் திருக்குறள் முற்றோதல் பயிற்றுவிக்க ஆர்வமும், அனுபவமும் உள்ள பயிற்சியாளர்கள், புரவலர்கள்.
மாவட்டத்திற்கு 2000 திருக்குறள் நூல்கள் வீதம் ஆண்டுக்கு 80000 திருக்குறள் நூல்களை
அடுத்த ஐந்து ஆண்டுகளுக்கு இலவசமாக வழங்குவோர்: உலகத் தமிழ் வளர்ச்சி மன்றம், USA
ஒருங்கிணைப்பாளர்கள்
பயிற்சி விவரங்களுக்கு
E-Mail: kural.mutrothal@gmail.com
Web: https://Thirukkural.ValaiTamil.com
Whatsapp: +917358644673

மாவட்ட ஒருங்கிணைப்பாளர்கள் கீழ்காணும் பதாகையை உங்கள் அமைப்பின் இலச்சினை (Logo) அல்லது பெயர் போட்டு வடிவமைத்து உங்கள் மாவட்ட நிகழ்ச்சிகளில். பயன்படுத்தவும்.

ஆசிரியர் பக்கம்

வணக்கம்,

உலகத் திருக்குறள் முற்றோதல் இயக்கம் தொடங்கி இரண்டாவது ஆண்டில் பயணிக்கிறோம். இதுவரை தமிழ்நாட்டின் பெரும்பாலான மாவட்டங்களில் உணர்வோடும், உந்துதலோடும் திருக்குறள் சுடரைக் கையில் ஏந்தி தனித்துப் பயணித்துக்கொண்டிருந்த பலரையும் உலகத் திருக்குறள் முற்றோதல் இயக்கம் பெரும் நம்பிக்கையை ஏற்படுத்தி அவர்களோடு கைகோர்த்து, அவர்களுடைய தனித்த அடையாளங்களையும், செயல்பாடுகளையும் மேலும் உயர்ந்திடும் நோக்கில் கட்டமைப்பை ஏற்படுத்தியுள்ளது. இது தமிழ்நாடு, பாண்டிச்சேரி மட்டுமல்லாது உலகின் பல நாடுகளிலும் முற்றோதல் செய்து திருக்குறள் மாணவர்களை உருவாக்கத் திட்டமிட்டுப் பயணிக்கிறது.

இவ்வமைப்பில் தலைவர் இல்லை, செயலாளர் இல்லை, பொருளாளர் இல்லை, பொன்னாடை இல்லை, புகழ்ச்சி இல்லை, தன்முனைப்பு இல்லை, தனிப் பெருமைகள் இல்லை, பணம் கொடுத்து அழைக்கும் விருந்தினர்கள் இல்லை, கூட்டத்தைக் கவரும் கவர்ச்சிகள் இல்லை. இருக்கைகளை நிரப்ப வணிக உத்திகள் இல்லை, பள்ளி, கல்லூரிகளுடன் இணைந்து இருக்கைகளை நிரப்பும் தேவைகள் இல்லை, கூட்டத்தைக் கூட்டாமல், தானாகக் கூடும் அறிவார்ந்த கட்டமைப்பாக உருவாக்க முனைகிறோம்.

இவ்வமைப்பில் ஆர்வமுள்ளவர்கள், திருக்குறளின் மேல் மதிப்புள்ளவர்கள், மக்களிடம் வாழ்வியலாகக் கொண்டு சேர்க்க முடியவில்லையே என்று கவலைப்படுபவர்கள், திருக்குறளை முன்னிறுத்தி தமிழ்ச் சமூகம் ஒரு அறநெறி கொண்ட, முன்மாதிரி சமூகமாக விளங்கவேண்டும் என்று சிந்திப்பவர்கள், திருக்குறளை வைத்துக்கொண்டு தமிழ்ச்சமூகம் ஏன் இன்னும் இப்படி உள்ளது என்று காரணம் தேட முயல்பவர்கள், சாதி-மத-அரசியல் அடையாளம், பொறுப்புகள் இல்லாமல் கலந்துகொள்ளும் தமிழின் மதிப்பிற்குரிய, அறிவார்ந்த, சமூக அக்கறை கொண்ட மேன்மக்கள் கூடும் கூட்டமாக விளங்கவேண்டும் என்று விரும்புகிறோம்.

எவரும் எவரையும் நிர்வாகம் செய்யவேண்டிய அவசியமில்லை. திருக்குறள் படித்த நமக்கு சுய ஒழுங்கு இருக்கவேண்டும் என்ற எதிர்பார்ப்பைக் கொண்டிருக்கிறோம். தொடர்ந்து பயிற்சிகளை வழங்கிவருகிறோம்.

இந்த இரண்டாவது ஆண்டில் திருக்குறள் ஐம்பெரும் விழாவாக நடைபெறுவது அனைவருக்கும் பெருமை தரத்தக்கச் செய்தியாகும். இது மிகவும் நிதானமாக, அனைவரோடும், அரசோடும் கைகோர்த்து சமூக நலனை, மாணவர்களின் அறம் சார்ந்த வளர்ச்சியை முதன்மை நோக்கமாகக் கொண்டு தொடர்ந்து அமைதியாகப் பயணிக்கும். இதற்கு கள அனுபவம் உள்ள உங்கள் ஒவ்வொருவரின் பேரன்பும், ஒத்துழைப்பும், ஆலோசனையும், தொடர் வழிகாட்டலும் இயக்கத்திற்குத் தேவை.

திட்ட ஒருங்கிணைப்பாளர்,
வலைத்தமிழ் ச.பார்த்தசாரதி,

உலகத் திருக்குறள் முற்றோதல் இயக்கம் - என்ன செய்கிறது?

உலகப் பொதுமுறையாம் திருக்குறளை இளம் வயதிலேயே மாணவ மாணவியர் மனப்பாடம் செய்தால் வாழ்நாள் முழுவதும் மனத்தில் நிற்கும். "இளமையில் கல்வி பசுமரத்தாணி" என்பது பழமொழி.

திருக்குறள் மனித இனத்தின், குறிப்பாக தமிழர்களின் மாபெரும் பொதுவுடைமைச் சொத்து. திருக்குறள் நெறிகள் பரவப்பரவ, அறம் பரவும். தமிழ் மொழிப்பயிற்சியும், மாணவர்களுக்குக் கிடைக்கும். அறமும், மொழியும் வளரும். மேலும் அறமும், திறனும், ஒருங்கே வாய்ந்த இளைஞர் சமுதாயம் உருவாகிட வலுவான அடித்தளமாக திருக்குறள் மனனம் அமையும். சமுதாயத்தில் நல்லிணக்கமும், மனித நேயமும் வளரும்.

திருக்குறள் பொருள் பொதிந்த, பொருள் நிறைந்த, இகலில்லா இன்ப வாழ்க்கையின் கையேடு.

கிட்டத்தட்ட 20 ஆண்டுகளுக்கும் மேலாக, 1330 திருக்குறளையும் மனப்பாடம் செய்து ஒப்பிக்கும் மாணவ மாணவியரை ஊக்குவிக்கும் வகையில் தமிழக அரசு சான்றிதழ் மற்றும் பரிசுத் தொகை வழங்கி வருகிறது. திருக்குறள் முற்றோதல் செய்யும் 70 மாணவர்களுக்கு, 2021 ஆம் வருடம் வரை, தலா ரூ.10000/- திருவள்ளுவர் தினத்தன்று அரசு வழங்கி வந்தது.

இந்த சூழ்நிலையில் தமிழக அரசு 2022 ஆம் ஆண்டு சட்டசபையில் 70 மாணவர்கள் என்ற உச்சவரம்பை நீக்கியது.பரிசுத்தொகையும் உயர்த்தப்படும் என்று மாண்புமிகு தமிழ் வளர்ச்சித் துறை அமைச்சர் சட்டசபையில் அறிவித்தார். {தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை. தமிழ் வளர்ச்சி மானியக் கோரிக்கை - 46 அறிவிப்புகள் (2021-2022)}. கடந்த 20 ஆண்டுகளுக்கும் மேலாக இதுவரை ஆண்டுதோறும் பரிசு பெறும் மாணவர்களின் வயதைப் பார்த்தால் 95 விழுக்காடு மாணவ/மாணவியர் 14 வயதுக்குட்பட்டே இருக்கிறார்கள். ஆறு/ஏழாம் வகுப்புக்குள் மனனம் செய்துவிட்டால், பிறகு மேல் வகுப்புகளில் பொருளுணர்ந்து படிக்க ஏதுவாக இருக்கும். தனிவாழ்வில் நிறைவான வாழ்க்கை வாழவும், சமுதாய பிரச்சனைகளை திருக்குறள் துணையுடன் எதிர் கொள்ளவும், இளவயதிலேயே 1330 அருங்குறள் மனனம் பயனுள்ளதாக இருக்கும்.

இந்தப் பின்புலத்தில், வலைத்தமிழ், வள்ளுவர் குரல் குடும்பம், சர்வீஸ் டு சொசைட்டி என்ற மூன்று அமைப்புகளும் இணைந்து, தமிழ்நாடு, புதுச்சேரியில் ஏற்கனவே திருக்குறள் முற்றோதல் பயிற்சியளிக்கும் ஆசிரியர்களை ஒருங்கிணைத்து, ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒரு ஒருங்கிணைப்பாளர், ஒரு பயிற்சியாளர், ஒரு புரவலர் அடையாளம் கண்டு அக்டோபர் 2021ல் தொடங்கப்பட்டது இவ்வியக்கம். எம்முடன் உலகத் தமிழ்வளர்ச்சி மன்றம், USA இணைந்து ஒரு மாவட்டத்திற்கு 2000 திருக்குறள் நூல்கள் வீதம் ஒரு ஆண்டுக்கு 80,000 திருக்குறள் நூல்களையும், ஐந்து ஆண்டுகளுக்கு மொத்தம் 4 லட்சம் நூல்களையும் அரசுப்பள்ளி மாணவர்களுக்கு இலவசமாக வழங்க முன்வந்தது

உங்கள் மாவட்ட திருக்குறள் பரப்புரை தேவைகளுக்கு பொறுப்பேற்க திருக்குறள் புரவலர்களை அழைக்கிறோம்.

உலகத் திருக்குறள் முற்றோதல் இயக்கம் நன்கொடை பெறுவதில்லை. ஒவ்வொரு மாவட்டத்திலும் அந்த மாவட்டத்தை சார்ந்த திருக்குறள் முற்றோதல் பயிற்சியாளர் ஒருவரை அடையாளம் கண்டு அல்லது உருவாக்கி பகுதிநேர-முழுநேர திருக்குறள் பயிற்சி வழங்க ஊக்கத்தொகை, மாணவர்களுக்கு சான்றிதழ் அச்சடித்தல், "குறள் வழி" இதழுக்கு விளம்பரம் கொடுத்து இலவச இதழ்களை அனுப்ப உதவுதல் என்று சுயமாக உங்கள் மாவட்டத்தில் பொறுப்பேற்க அழைக்கிறோம். ஊர் கூடி பயணிக்கும் திருக்குறள் தேரை இழுக்க வடம் பிடிக்க வாருங்கள். எமக்கு அறம் சார்ந்த வணிகர்கள் அவர்கள் தொழில்களை விளம்பரம் செய்து உங்கள் மாவட்டத்தில் திருக்குறள் பரப்புரைக்கு உதவலாம்.

உலகத் திருக்குறள் முற்றோதல் இயக்கத்தின் குறிக்கோள்கள்

1. தமிழ்நாடு அரசின் புதிய அறிவிப்பைத் தொடர்ந்து, 1330 திருக்குறளையும் மனனம் செய்யும் மாணவர்களை அதிக அளவில் உருவாக்கி, அறம் சார்ந்த, பொருள் வளம்மிக்க நல்லிணக்க சமுதாயத்தைக் கட்டமைத்தல்.

2. பள்ளித் தலைமை ஆசிரியர்கள்/ ஆசிரியர்கள், பெற்றோர்களுடன் இணைந்து செயல்பட்டு ஆர்வமும் மனனம் செய்யும் திறனும் மிக்க மாணவர்களை இனம் கண்டு, அவர்களுக்குத் திருக்குறள் முற்றோதல் மனனப் பயிற்சியை 9-ஆம் வகுப்புக்குள் அளித்தல். அவர்களுக்கு அரசு சான்றிதழ் மட்டுமின்றி உலகத் திருக்குறள் முற்றோதல் இயக்கத்தின் "திருக்குறள் முற்றோதல்-இளநிலை" சான்றிதழ் வழங்குதல்.

3. வயதுக்கு ஏற்ப, முற்றோதல் முடித்த அனைவரும் கல்லூரி செல்வதற்கு முன்பு முழுமையாக குறளின் பொருளை அறிந்துகொள்ள வழிசெய்தல். அதில் நேர்முகத் தேர்வு வைத்து பொருள் உணர்ந்து படித்துள்ளவர்களுக்கு "திருக்குறள் முற்றோதல்-முதுநிலை" சான்றிதழ் வழங்குதல்.

4. திருக்குறள் முற்றோதல் பயிற்றுவிக்க தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் தகுதியான அனுபவமும் ஆர்வமும் மிக்க முற்றோதல் முடித்த பயிற்சியாளர்களை அடையாளம் கண்டு பயிற்சியாளராகவும், அந்த பயிற்சியாளருக்கு மாதம் ஒரு ஊக்கத்தொகை வழங்க ஒரு புரவலரையும், மாவட்ட ஒருங்கிணைப்பு செய்ய ஒரு ஒருங்கிணைப்பாளரையும் நியமித்தல்.

5. தமிழ்நாடு மற்றும் புதுவையில் பள்ளி, கல்லூரி உள்ளிட்ட கல்விக்கூடங்களில் திருக்குறள் சிலை நிறுவவும், மாநிலம் முழுதும் ஒவ்வொரு ஊரிலும் ஒரு திருவள்ளுவர் சிலை வைத்து திருக்குறள் மறையோதல் செய்து வாழ்வியல் கருத்துகளை உள்வாங்கி வாழ்க்கையை முன்னுதாரணமாக திருக்குறள் வழியில் அமைத்துக்கொள்ள அரசுகளுடன்,அமைப்புகளுடன் உரையாடி உரிய வழிவகை செய்வது. ஒவ்வொரு ஆண்டும் திருவள்ளுவர் நாளில், திருக்குறள் முற்றோதல் முடித்தவர்கள் அனைவரும் அந்தந்த மாவட்டத்தில் உள்ள ஒரு குறிப்பிட்ட திருவள்ளுவர் சிலையின் முன் ஒன்றுகூடி, தமிழ் வளர்ச்சித்துறை, மாவட்ட நிர்வாகம் ஆகியவற்றுடன் இணைந்து குழுவாக "திருக்குறள் முற்றோதல்" செய்து, கற்றதை மறந்துவிடாமல் இருக்க வழிசெய்தல்.

6. குறள் முற்றோதல் முடித்த அனைவரின் விவரங்களையும் இணையத்தில் பட்டியலிட்டு, வரிசை எண் கொடுத்து அவர்கள் ஒருங்கிணைந்த வளர்ச்சியை, வெற்றியைப் பெற துணைநிற்றல்.

7. குறள் முற்றோதல் முடித்த அனைவரும் ஒருவருக்கொருவர் துணை நின்று கல்வி, வேலைவாய்ப்பு, மகிழ்ச்சியான, நிறைவான வாழ்க்கையை வாழவும், வேலைவாய்ப்பில், தொழிலில் வெற்றிபெறவும் முன்னுரிமை கொடுத்து அவர்களுக்கு உரிய உதவிகளைப் பெற துணைநிற்றல்.

8. திருக்குறள் முற்றோதல் முடித்த மாணவர்களுக்கு அரசு வேலைவாய்ப்பில் 5% முன்னுரிமை வழங்க கோரிக்கை வைத்து முயற்சி மேற்கொள்ளப்படும்.

9. பள்ளிகளில் காலையில் ஒரு திருக்குறள் அதிகாரத்தை மறையோதி தொடங்க அரசுக்கு பரிந்துரைத்து அரசு சுற்றறிக்கை அனுப்ப முயற்சிப்பது. அனைத்து தமிழ் நிகழ்வுகளிலும் திருக்குறள் போற்றி பாடி, திருக்குறள் மறையோதி நிகழ்ச்சியைத் தொடங்குவதை நடைமுறையில் கொண்டுவர முயற்சிக்கப்படும்.

10. இதுவரை வெளிவந்துள்ள திருக்குறள் மொழிபெயர்ப்புகள்,உரைநூல்கள் மட்டுமல்லாது, திருக்குறள் சார்ந்த அனைத்து விதமான நூல்களையும் தொகுத்து "உலகத் திருக்குறள் ஆராய்ச்சி நூலகம்" ஒன்றை உருவாக்கி, உலகின் திருக்குறள் நூல் என்றால் அங்கு இருக்கும் என்ற நம்பிக்கையை ஏற்படுத்தும் வகையில், தொழில்நுட்பம், தற்சார்பு நிலையை ஏற்படுத்தி நிறுவ முயற்சி மேற்கொள்ளப்படும்.

www.Thirukkural.ValaiTamil.com | Kural.Mutrothal@gmail.com |

உலகத்த திருக்குறள் முற்றோதல் இயக்கத்தின் 2024 இலக்குகள்

- மாவட்டங்களில் பயிற்சிகளை விரிவாக்குதல். மாவட்டத்திற்கு 100 மாணவர்கள் முற்றோதல் பயிற்றுவிக்கும் இலக்கை நோக்கி நகர்தல்.
- தமிழ்நாடு அளவில் 124 என்ற தற்போதைய எண்ணிக்கையை குறைந்தது 1000 ஆக உயர்த்துதல்.
- குறள் வழி இதழை நிலைநிறுத்தி, பதிவு செய்தல்.
- மாவட்ட அளவில் புரவலர், பயிற்சியாளரை விரிவாக்குதல்.
- தொய்வு உள்ள சில மாவட்டங்களில் கவனம் செலுத்தி பலப்படுத்துதல்.
- முற்றோதல் ஆசிரியர் பயிற்சிக் கட்டமைப்பை உருவாக்குதல், பயிற்சியை தரப்படுத்தல்.
- 25 ஆண்டுகால 1200+ முற்றோதல் முடித்தவர்களை தொகுத்து மாவட்டம், பயிற்சியாளர், நாடு வாரியாக இணையத்தில் வெளியிடுதல்.
- முற்றோதல் முடித்தவர்களுக்கு அதிக வாய்ப்புகளை ஏற்படுத்தி முன்னுரிமை அளித்தல்.
- மாவட்ட அளவில் 2024 இறுதியில் திருவள்ளுவர் நாளில் மாவட்ட அளவில் குழுவாக முற்றோதல் செய்யவைத்தல்.
- திருக்குறள் ஆளுமைகளைத் தொகுத்து வெளியிடுதல்.
- 25 ஆண்டுகளாக முடித்தவர்களுக்கு முற்றோதல் இளநிலை சான்றிதழ் வழங்குதல்.
- முற்றோதல்—முதுநிலை நேர்முகத் தேர்வுக்கு பாடத்திட்டம் வரையறை செய்து பயிற்சிக் கையேடு வெளியிடுதல்.
- மாவட்ட அளவில் திருக்குறள் சார்ந்த ஆளுமைகள், ஆர்வலர்களை மாவட்டக் குழுவில் சேர்த்தல். அனைவரும் ஒருங்கிணைந்து குழுவாக கைகோர்த்து செயல்படுதல்.
- உலகத் தமிழ் வளர்ச்சி மன்றம், தமிழிருக்கைக் குழுவுடன் இணைந்து 80000 திருக்குறள் நூல்களை அரசுப்பள்ளி மாணவர்களுக்கு கோண்டுசேர்த்து பயிற்சியை வழங்குதல்.

திருக்குறள் முற்றோதல் பயிற்சி தொடக்க விழா - மறுபதிவு..

பள்ளிக் கல்வித்துறை மற்றும் உலகத் திருக்குறள் முற்றோதல் இயக்கம் இணைந்து நடத்தும் பள்ளி மாணவர்களுக்கு திருக்குறள் நூல்கள் வழங்கி முற்றோதல் பயிற்சி தொடக்கவிழா, தி.நகர், சென்னை, ஹோலி ஏஞ்சல் ஆங்கிலோ இந்தியன் மேல்நிலைப்பள்ளியில் இன்று (05.12.2022) காலை 9:30 மணிக்கு நடைபெற்றது.

திருக்குறள் நூல்களை இவ்வாண்டு, முதல் மாவட்டமாக சென்னைக்கு வழங்கி **மாண்புமிகு கல்வியமைச்சர் திரு. அன்பில் மகேஷ் பொய்யாமொழி** அவர்கள் 05-12-2022 (திங்கள்கிழமை) அன்று தொடங்கிவைத்து சிறப்புரையாற்றினார்.

நன்றி... நன்றி... நன்றி...

உலகத் திருக்குறள் முற்றோதல் இயக்கத்துடன் இணைந்து, தமிழ்நாட்டு அரசுப்பள்ளி மாணவர்களுக்கு இலவசமாக திருக்குறள் நூல்களை வழங்கும் உலகத் தமிழ்வளர்ச்சி மன்ற ஒருங்கிணைப்பாளர் மருத்துவர் விஜய் ஜானகிராமன் அவர்களுக்கும், அவருடன் துணைநிற்கும் அனைத்து புரவலர்களுக்கும் நன்றி...

திருக்குறள் ஐம்பெரும் விழா –2024

வலைத்தமிழ்.com www.ValaiTamil.com

வள்ளுவர் குலம் குடும்பம்

கற்க கசடற karka.in

தேதி
11-02-2024, 10:00AM - 3:00PM
ஞாயிற்றுக்கிழமை

விழா நடைபெறும் இடம்
திருவள்ளுவர் அரங்கம்
Indian Officers Association(IOA),
Sri Krishnapuram Street, Royapettah,Ajantha Bus Stop,
Thiru Vi Ka High Road, Chennai - 600014.

Location Map

1. ஆங்கில நூல் வெளியீடு : Thirukkural Translations in World Languages

வெளியிடுபவர்

மாண்பமை நீதியரசர்.
அரங்க. மகாதேவன்

பெறுபவர்கள்

முனைவர்
ஔவை அருள்

முனைவர்
சி.சுப்பிரமணியம்
மேனாள் துணைவேந்தர்

கலைமாமணி
டாக்டர். வி.ஜி.சந்தோசம்



2. உலகத் தமிழ்மொழி அறக்கட்டளை, சிகாகோ, தமிழ்ப்பண்பாட்டுக் கையேடு, திருக்குறள் நூல், 3ஆம் பதிப்பு வெளியீடு (தங்கப் பதிப்பு)

நூல் அறிமுகம்

பேராசிரியர் முனைவர். இ.சுந்தரமூர்த்தி
துணைத்தலைவர்,
செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம்

ஒருங்கிணைப்பு

திருமதி மீனாட்சி ராம்மோகன்
இயக்குநர், உலகத் தமிழ்மொழி அறக்கட்டளை

திரு. மணி மணிவண்ணன்
திருக்குறள் நூல் வடிவமைப்பாளர்

3. "நவில்தொறும் நூல்நயம்"– பொன்விழா வாரம்

தலைமையுரை

பேராசிரியர் இ சுந்தரமூர்த்தி,
துணைத் தலைவர், செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம்

"வள்ளுவம்" நூல் குறித்து சிறப்புரை

பேராசிரியர் அரங்க இராமலிங்கம்
மேனாள் தலைவர், தமிழ்த் துறை,
சென்னைப் பல்கலைக்கழகம்

YouTube

50 வாரக் காணொளிகள்

நிகழ்ச்சியைத் திட்டமிட முன்பதிவு அவசியம்: முன்பதிவு செய்ய www.GlobalTamilEvents.com GlobalTamilEvents +91 73055 71897

திருக்குறள் ஐம்பெரும் விழா –2024

தேதி
11-02-2024, 10:00AM - 3:00PM
ஞாயிற்றுக்கிழமை

விழா நடைபெறும் இடம்
திருவள்ளுவர் அரங்கம்
Indian Officers Association(IOA),
Sri Krishnapuram Street, Royapettah,Ajantha Bus Stop,
Thiru Vi Ka High Road, Chennai - 600014.

Location Map

4. உலகத் திருக்குறள் முற்றோதல் இயக்கம் – இரண்டாம் ஆண்டு விழா

செயல்திட்ட விளக்கம், மாவட்டத் தொடர்பாளர்கள் அறிமுகம், பயிற்சியாளர்களுக்குப் பாராட்டு,
புரவலர்களுக்கு நன்றி கூறல், அடுத்தக்கட்டத் திட்டமிடுதல்.

குறள் வழி இதழ் வெளியீடு

ஒருங்கிணைப்பு

மருத்துவர்.
சுந்தரேசன் சம்மந்தம்
இயக்குநர் , தமிழிருக்கை குழுமம், அமெரிக்கா.

மருத்துவர்.
விஜய் ஜானகிராமன்
உலகத் தமிழ் வளர்ச்சி மன்றம், அமெரிக்கா, திருக்குறள் நூல் முலவர்

வலைத்தமிழ் திரு. ச.பார்த்தசாரதி

திரு. சி.இராஜேந்திரன் IRS(Rtd)

திரு. இரவி சொக்கலிங்கம்

குறள் வழி
திருக்குறள் முற்றோதல் மாத மின்னிதழ்

- கடந்த 25 ஆண்டுகளில் திருக்குறள் முற்றோதல் முடித்த 1100+ பேரின் விவரங்களை தொகுத்து வெளியிட இணையதளம்
- முற்றோதல் பயிற்சியாளர் பயிற்சிக் கையேடு
- இலவசமாக வழங்கப்பட்ட 40000 திருக்குறள் நூல்கள் குறித்த கள அனுபவம்.
- திருக்குறள் முற்றோதல் பயிற்சிக்கு முழுநேர–பகுதிநேர பயிற்சியாளர்கள் தேவையும், திட்டமும்
- திருக்குறள் புரவலாக்கல் வாய்ப்புகள்

5. திருக்குறள் புதிய மொழிபெயர்ப்புகள் அறிமுகம் : டேனிஷ் உள்ளிட்ட மொழிபெயர்ப்புகள்

நூல்கள் அறிமுகம்

திரு. கண.இளங்கோவன்
பொதுச் செயலாளர்
தமிழ்க் கல்வி வளர்ச்சி மையம், மியன்மார்.

திரு. கஜேந்திரன் நாகலிங்கம்
டென்மார்க்



திகழ்ச்சியைத் திட்மிட முன்பதிவு அவசியம்: முன்பதிவு செய்ய www.GlobalTamilEvents.com GlobalTamilEvents +91 73055 71897

திருக்குறள் ஐம்பெரும் விழா –2024

வலைத்தமிழ்.com www.ValaiTamil.com

கற்க கசடற karka.in

தேதி
11-02-2024, 10:00AM - 3:00PM
ஞாயிற்றுக்கிழமை

விழா நடைபெறும் இடம்
திருவள்ளுவர் அரங்கம்
Indian Officers Association(IOA),
Sri Krishnapuram Street, Royapettah,Ajantha Bus Stop,
Thiru Vi Ka High Road, Chennai - 600014.

Location Map

திருக்குறள் முற்றோதல், பரவலாக்கத்தில் பங்கேற்கும், துணைநிற்கும் அமைப்புகள்

திருக்குறள் அமைப்புகள்

திருக்குறள் முற்றோதல் பயிற்றகம்,
தஞ்சாவூர் மாவட்டம்
உலகத் திருக்குறள் முற்றோதல் இயக்கம்,
நாமக்கல் மாவட்டம்
உலகத் திருக்குறள் முற்றோதல் இயக்கம்,
மதுரை
இண்டியனம் தமிழ்ச் சங்கம்,
வீழுப்புரம் மாவட்டம்
குறளகம்,
கன்னியாகுமரி மாவட்டம்
திருவள்ளுவர் கழகம்,
தென்காசி மாவட்டம்
குறள் நேதிப் பயிலகம்,
புதுக்கோட்டை மாவட்டம்
உலகத் திருக்குறள் முற்றோதல் இயக்கம்,
அரியலூர் மாவட்டம்
திருவள்ளுவர் படிப்பகம்,
திருவண்ணாமலை மாவட்டம்
ஐயன் திருவள்ளுவர் படிப்பகம்,
திருப்பூர் மாவட்டம்
உலகப் பொதுமறை திருக்குறள் பேரவை,
காஞ்சிபுரம் மாவட்டம்
திருக்குறள் மன்றம்,
திருப்பத்தூர் மாவட்டம்.
திருவள்ளுவர் மன்றம் & வையைத் தமிழ்ச்சங்கம்,
தேனி மாவட்டம்
வள்ளுவர் பேரவை,
சிவகங்கை மாவட்டம்
திருக்குறள் தமிழ்ப்பேரவை,
ராணிப்பேட்டை மாவட்டம்
உலகத் திருக்குறள் முற்றோதல் இயக்கம்,
நாகப்பட்டினம் மாவட்டம்
திருக்குறள் பேரவை,
மயிலாடுதுறை மாவட்டம்
திருவள்ளுவர் கல்வி மன்றம்,
சென்னை மாவட்டம்
புதுவை தமிழ்ச்சங்கம்,
புதுச்சேரி

உலகத் திருக்குறள் பேரவை,
கடலூர் மாவட்டம்
திருக்குறள் நடுவம்,
கள்ளக்குறிச்சி மாவட்டம்
திருக்குறள் முற்றோதல் மையம்,
திருவண்ணாமலை மாவட்டம்
திருவள்ளுவர் வாழ்வியல் மன்றம்,
திண்டுக்கல் மாவட்டம்
குறளகம்,
மதுரை மாவட்டம்
திருக்குறள் முற்றோதல் பயிற்றகம்,
மதுரை மாவட்டம்
திருவள்ளுவர் சேவா சங்கம்,
வேலூர் மாவட்டம்
திருக்குறள் கவனகர் இரா. எல்லப்பன் நினைவாற்றல் பயிலகம்,
செங்கல்பட்டு மாவட்டம்
திருக்குறள் முற்றோதல் பயிற்றகம்,
தூத்துக்குடி மாவட்டம்
வாணியம்பாடி திருக்குறள் மன்றம்,
திருப்பத்தூர் மாவட்டம்
திருவள்ளுவர் படிப்பகம்,
திருநெல்வேலி மாவட்டம்
திருக்குறள் திருமூலநாதன் அறக்கட்டளை,
திருச்சி மாவட்டம்
திருக்குறள் முத்தமிழ் மன்றப்பாடச்சாலை,
திருவண்ணூர் மாவட்டம்
மயிலாடுதுறை தமிழ்ச்சங்கம்,
மயிலாடுதுறை மாவட்டம்
திருவள்ளுவர் ஞான மன்றம்,
அரியலூர் மாவட்டம்
திருக்குறள் முற்றோதல் பயிற்றகம்,
நீலகிரி மாவட்டம்
உலகத் திருக்குறள் பேரவை,
ஈரோடு மாவட்டம்
திருவள்ளுவர் படிப்பகம்,
தென்காசி மாவட்டம்

பிற ஆதரவு அமைப்புகள்

ஜெனி.பர் இனிப்பகம் & அடுமனை,
மயிலாடுதுறை மாவட்டம்
பசியில்லா தர்மபுரி,
தர்மபுரி மாவட்டம்

வள்ளுவர் அறிவியல் மற்றும் மேலாண்மைக் கல்லூரி,
கரூர் மாவட்டம்

திருக்குறள் களப்பணியில் ஈடுபடும் அமைப்புகளை நிகழ்ச்சியில் கலந்துகொள்ள அன்போடு அழைக்கிறோம்.

மதிய உணவு, தேநீர் வழங்கப்படும்

நிகழ்ச்சியைத் திட்மிட முன்பதிவு அவசியம்: முன்பதிவு செய்ய www.GlobalTamilEvents.com GlobalTamilEvents +91 73055 71897

அனைவருக்கும் வணக்கம்,

திருக்குறள் ஐம்பெரும் விழா-2024 வரும் பிப்ரவரி 11 அன்று முழுநாள் நிகழ்வாக திட்டமிடப்பட்டுள்ளது.

அனைவரும் வருக..

1. **"Thirukkural Translations in World Languages"** நூல் வெளியீடு
2. "நவில்தொறும் நூல்நயம்" பொன்விழா வாரம்
3. உலகத் தமிழ்மொழி அறக்கட்டளை, சிகாகோ அமெரிக்கா, தமிழ்ப்பண்பாட்டுக் கையேடு திருக்குறள் நூல் மூன்றாம் பதிப்பு வெளியீடு
4. உலகத் திருக்குறள் முற்றோதல் இயக்கம் இரண்டாம் ஆண்டு விழா - சந்திப்பு
5. உலக அளவில் புதிதாக வெளிவந்த திருக்குறள் மொழிபெயர்ப்பு நூல்கள் அறிமுகம்.

தங்கள் வருகையை பதிவு செய்வது நிகழ்ச்சியை திட்டமிட வசதியாக இருக்கும். உங்களுக்குத் தெரிந்த திருக்குறள் ஆர்வலர்கள், அமைப்புகளுக்கு பகிரவும்.

பதிவு செய்ய :

https://www.globaltamilevents.com/thirukkural-vizha-2024-tview1223.html

திருக்குறள் மந்திரங்கள் - 108 போற்றி அகவல் || இயற்றி...
திருக்குறள் மந்திரங்கள் - 108 போற்றி அகவல்
இயற்றியவர்
புலவர் இரா. இளங்குமரனார்
0:00 / 8:18
Scroll for details

உலகத் தமிழ் மொழி அறக்கட்டளை
INTERNATIONAL TAMIL LANGUAGE FOUNDATION (ITLF)
8417, Autumn Drive, Woodridge, IL-60517, USA.
ஒவ்வொரு வீட்டிலும்
இருக்கவேண்டிய நூல்
உங்கள் பிரதிக்கு
இன்றே முந்துங்கள்
ORDER NOW
திருக்குறள்
TIRUKKURAL
The Holy Scripture
தமிழர் பண்பாட்டுக் கையேடு
THE HANDBOOK OF TAMIL CULTURE AND HERITAGE
தமிழின எதிர்கால வழிகாட்டி
GUIDE TO TAMILS FUTURE
திருக்குறள்–தமிழ்மரபு, தமிழ்ப்பண்பாட்டுக் கையேடு, தமிழின எதிர்கால வழிகாட்டி என்று மூன்று தலைப்புகளைக் கொண்டு ஒரே முத்தகமாக வெளிப்பட்டுள்ளது. 1812 பக்கங்கள் கொண்ட இந்தப் முத்தகம் 9½ x 6½ அளவில் மிக மெல்லிய உயர்தரமான தாளில் தக்க முறைப் பூசப்பட்டு அச்சிடப்பட்டுள்ளது. அனைத்தும் இரு மொழிகளில் (தமிழ்–ஆங்கிலம்) உள்ளன.
முதல் பகுதி: இதில் திருக்குறள் மூலத்துடனும், சீர் பிரிக்கப்பட்டும் இடம் பெற்றுள்ளன. பேராசிரியர் பி.எஸ்.சுந்தரம் அவர்களின் ஆங்கில மொழிபெயர்ப்பு, பேராசிரியர் தமிழண்ணல் தமிழ் விளக்கவுரை மற்றும் மணியன் செல்வன் அதிகார சித்திர ஓவியங்கள் இடம் பெற்றுள்ளன. மேலும், இலக்குறிப்புடன் திருக்குறள் வழிகாட்டி மந்திரங்களும், முதற்குறிப்பு அகராதி, அருஞ்சொல், பொருள் அகராதிகளை, திருக்குறள் பெருமையும் உள்ளன.
இரண்டாம் பகுதி: தமிழ், தமிழர் பற்றிய வரலாறு இடம் பெற்றுள்ளது. இப்பகுதியில் மொழி, கலை, இலக்கியம், மருத்துவம், தொழில்நுட்ப மேன்மை என்ற பல தலைப்புகளில் கட்டுரைகள் அமைந்துள்ளன.
மூன்றாம் பகுதி: தமிழின எதிர்காலத்துக்கு வழிகாட்டியாக, அறிவு சார்ந்த உலகத்தில் வென்றி பெற்ற தேவையான மன உறுதியை வளர்க்க உதவும் கட்டுரைகள் இடம் பெற்றுள்ளன.
மூன்றாம் பதிப்பின் சிறப்பு அம்சங்கள்:
✓ திருக்குறள் ஒரு கண்ணோட்டம் – ஐடாலெரிக்கத்தமிழ்ப் பள்ளி மாணவர்கள் கட்டுரை
✓ திருக்குறள் மொழிபெயர்ப்புகளும்பதிப்புகளும் – புதுப்பிக்கப்பட்ட கட்டுரை
✓ கீழடி – வைகை நதிக்கரையில் – சங்ககால நகர நாகரிகம்
✓ பொருநை: ஆற்றங்கரை நாகரிகம் – தமிழ்ப் பண்பாட்டின் தொட்டில்
✓ ஒரு பண்பாட்டின் பயணம்: சிந்து முதல் வைகை வரை – ஓர் அறிமுகம்
✓ உலகு முதலை மேம்படுத்த திருக்குறளோடு இணைந்த மூச்சுயிற்சிகள் – பயிற்சிக் கையேடு.
இணையத்தில் பெற
For USA, CANADA
www.kural.org
For INDIA and other countries
(Delivery in India address)
www.eStore.ValaiTamil.com

04.01.24 அன்று குறள் வழி மாத இதழை முதுமுனைவர் சத்திய வேல் முருகனார் ஐயா மற்றும் தெய்வத்தமிழ் அறக்கட்டளை புரவலர் மற்றும் இந்தியா பில்டர் நிறுவனர் திரு. தம்பிக்கலைஞன் ஆகியோருக்கு குறள் வழி இதழின் ஆசிரியர் வழங்கினார்..

மாவட்டத் திருக்குறள் செயல்பாடுகள்

திருவண்ணாமலை வட்டம்

3.1.2024 அன்று திருவண்ணாமலை மாவட்டம் சு. ஆண்டாப்பட்டி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி மாணவ மாணவியற்கு திருக்குறள் நூல்கள் வழங்கப்பட்டன.

7.1.2024 அன்று திருவண்ணாமலை மாவட்டம் நகராட்சி பெண்கள் அரசு மாதிரி மேல்நிலைப்பள்ளி திருக்குறள் நூல்கள் வழங்கப்பட்டன.

திருவண்ணாமலை மாவட்டம் சேத்துப்பட்டு ஒன்றியம் நெடுங்குணம் கிராமம் அரசு பள்ளி மாணவர்களுக்கு இலவசத் திருக்குறள் நூலும், உலகத் திருக்குறள் முற்றோதல் இயக்கத்தின் சார்பில் சான்றிதழும் வழங்கப்பட்டது.

திருவண்ணாமலை திருக்குறள் சமுதாயம் சார்பில் (16.01.2024) இன்று 42-ஆம்ஆண்டு திருக்குறள் தேர்த்திருவீதி உலாவை பூவை.பி.தயாபரன் அவர்கள் தொடங்கி வைத்து உரையாற்றினார்...

திண்டுக்கல் மாவட்டம்

திண்டுக்கல் மாவட்டம் கள்ளிமந்தயம் ஊராட்சி தொப்பாக்கவலசு அரசு ஆரம்ப பள்ளி மாணவர்களுக்கு திருக்குறள் நூல்கள் வழங்கப்பட்டன.

திருச்சி மாவட்டம்

திருச்சி சேவசங்கம் பெண்கள் மேல்நிலைப்பள்ளி, தஞ்சம்மாள் நினைவு தொடக்கப்பள்ளி

85 ஆண்டுகளுக்கு முன்பு, எளிய வசன நடையில் அதன் உட்பொருள் மாறாமல் திருக்குறளுக்கு உரை எழுதிய முதல் பெண்மணி மருங்காபுரி ஜமீன்தாரிணியான கி.சு.வி.லட்சுமிக்கு விழா

கிட்டத்தட்ட 85 ஆண்டுகளுக்கு முன்பு, பெண்கள் எழுத வருவதே அரிதாக இருந்தது. ஆனால் மருங்காபுரி ஜமீன்தாரிணியான கி.சு.வி.லட்சுமி அம்மணி, 1929-ம் ஆண்டு திருக்குறள் தீபாலங்காரம் என்னும் பெயரில் ஒரு அற்புதமான உரை நூலை எழுதித் தமிழுக்கு அளப்பரிய சேவை செய்துள்ளார். அதுவரை திருக்குறளுக்கு உரை எழுதிய தருமர், மணக்குடையார், தாமத்தர், நச்சர் அல்லது நத்தர், பரிமேலழகர், பருதி, திருவனையர் அல்லது திருமலையர், மல்லர், கவிப்பெருமாள், காளிங்கர் இவர்களது வரிசையில், 85 ஆண்டுகளுக்கு முன்பு, எளிய வசன நடையில் அதன் உட்பொருள் மாறாமல் உரை எழுதிய முதல் பெண்மணி என்னும் மதிப்பையும் இவர் பெற்றுள்ளார்.

திருச்சி மாவட்டம், மணப்பாறை அருகேயுள்ளது மருங்காபுரி. இது முன்னொரு காலத்தில் மருங்கிநாடு என்றும் அழைக்கப்பட்டது. இத்தகைய மருங்காபுரி ஜமீனாக இருந்தவர் கிருஷ்ணவிஜய பூச்சய நாயக்கர். இவர் ஒருமுறை புலியோடு சண்டை செய்து, அந்தப் புலியைக் குத்திக் கொன்றதால், புலிக்குத்து நாயக்கர் பரம்பரை என்றும் பெருமையோடு அழைத்துவருகின்றனர். மக்கள் நலன், குளம் வெட்டுதல் உள்ளிட்ட பொதுப் பணிகளை நீதி வழுவாத நிர்வாகத் திறமையுடன் நிர்வகித்து வந்ததால் இன்றளவும் மருங்காபுரி ஜமீன் மீது மணப்பாறை சுற்று வட்டாரப் பகுதி மக்களுக்கு நன்மதிப்பு உள்ளது. இந்தப் பெருமைகளுக்கெல்லாம் மகுடம் வைத்தது போல ஜமீன்தார் கிருஷ்ணவிஜய பூச்சய நாயக்கரின் மனைவியரில் ஒருவரும் ஜமீன்தாரிணியுமான கி.சு.வி.லட்சுமி அம்மணியின் தமிழ்த் தொண்டு காலம் கடந்தும் போற்றப்படுகிறது.


1928-ல் 'திருக்குறள் தீபாலங்காரம்' என்னும் நூல் எழுதிய
திருக்குறள் உரைவாரியர் மருங்காபுரி ஜமீன்தாரிணி
கி.சு.வி.லட்சுமி அம்மணி அவர்களின் புகழ் போற்றும் விழா
திருவள்ளுவர் பிறந்தநாள் விழா மற்றும்
தமிழ்த் திருநாளாம் பொங்கல் பெருவிழா ஆகிய
முப்பெரும் விழா அழைப்பிதழ்
பழந்தமிழ்க் காவிரி அறக்கட்டளை
மணப்பாறை.

தஞ்சாவூர் மாவட்டம்

தாமரை பன்னாட்டுப் பள்ளி, தஞ்சாவூர் மாவட்டம்.

திருக்குறள் ஒப்புவித்தல் போட்டி:

1330 குறட்பாக்கள் ஒப்பிப்பவருக்கு 1 பவுன் தங்க நாணயம்...
1080 குறட்பாக்கள் ஒப்பிப்பவருக்கு 1/2 பவுன் தங்க நாணயம்...
380 குறட்பாக்கள் ஒப்பிப்பவருக்கு 2 கிராம் தங்க நாணயம்
+ குறள் மாமணி விருது.

தூத்துக்குடி மாவட்டம்

30.1.24 அன்று தூத்துக்குடி மாவட்டம் திருவேங்கடம் அரசு மேல்நிலைப்பள்ளி மாணவர்களுக்கு திருக்குறள் நூல்கள் வழங்கப்பட்டன.

கோவில்பட்டியில் குறள்வழி நடக்க திருக்குறள் புத்தகங்கள் வழங்கல்

கோவில்பட்டி ரோட்டரி சங்கம் சார்பில் கோவில்பட்டி பழைய பேருந்து நிலையத்திற்கு வருகை தந்த மாணவர்கள் மற்றும் பொதுமக்களுக்கு குறள்வழி நடக்க திருக்குறள் புத்தகங்கள் வழங்கும் நிகழ்ச்சி நடந்தது.

திருவள்ளுவர் தின விழா, கோவில்பட்டி ரோட்டரிசங்கத்தின் 49வது ஆண்டு துவக்க விழா ஜனவரி 16ம் தேதி கடைபிடிக்கப்பட்டது.

இதில் கோவில்பட்டி பழைய பேருந்து நிலையத்துக்கு வருகை தந்த பொதுமக்கள் மற்றும் பள்ளி மாணவர்களுக்கு குறள் வழி நடக்க 200க்கும் மேற்பட்ட திருக்குறள் புத்தகங்கள் வழங்கப்பட்டது. இந்நிகழ்ச்சிக்கு ரோட்டரி சங்க தலைவர் வெங்கடேஷ் தலைமை வகித்தார். ரோட்டரி மாவட்ட உதவி ஆளுநர் முத்துச்செல்வம் முன்னிலை வகித்தார். ரோட்டரி மாவட்ட தலைவர் விநாயகா ரமேஷ் மாணவர்கள் மற்றும் பொதுமக்களுக்கு திருக்குறள் புத்தகங்களை வழங்கினார். இதில் ரோட்டரி சங்க நிர்வாகிகள் சரவணன் நாராயணசாமி, முத்து முருகன் உள்ளட பலர் கலந்து கொண்டனர்..

விருதுநகர் மாவட்டம்

முற்றோதல் போட்டியில் வென்ற மாணவர்கள்

திருவள்ளூர் மாவட்டம்

மீஞ்சூர் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி, திருவள்ளூர் மாவட்ட மாணவர்கள் முற்றோதலில் சாதனை

50 மாணவர்கள் மட்டுமே உள்ள மீஞ்சூர் அரசு ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளி இராமநாதபுரம் பள்ளியில் மாணவர்கள் 14 பேர் தமிழ் வளர்ச்சித் துறையின் மூலம் நடைபெற்ற 1330 திருக்குறள் மனன முற்றோதல் போட்டியில் கலந்து கொண்டு அனைவரும் வெற்றி பெற்றார்கள்.

ஏற்கனவே இந்த பள்ளியில் இருந்து 19 மாணவர்கள் அரசின் சான்றிதழ் மற்றும் பரிசு பெற்றுள்ளார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. இதற்கு காரணம் தலைமையாசிரியர் திருமதி. பிரேமா மற்றும் அவருக்கு துணை நிற்கும் ஆசிரியைகள். வெற்றிபெற்ற மாணவர்களுக்கும், வெற்றிபெற உழைத்த ஆசிரியர்களுக்கும், ஊக்குவித்த பொறுப்புடைய பெற்றோர்களுக்கும் நெஞ்சார்ந்த வாழ்த்துகள்.

கன்னியாகுமரி மாவட்டம்

23.01.2024 கன்னியாகுமரி மாவட்டத்தில் வெற்றி பெற்ற மாணவர்கள்

4.1.24 அன்று வடசேரி அரசு மேல்நிலைப் பள்ளி மாணவர்களுக்கு திருக்குறள் நூல்களை திரு. தமிழ்க்குழவி அவர்கள் வழங்கினார்.

கருணாகரன் நினைவு திருக்குறள் நூலகம் பேராசிரியர். திருக்குறள் க.பாஸ்கரன் அவர்களுக்கு உலகத் திருக்குறள் முற்றோதல் இயக்கத்தின் "திருக்குறள் வாழ்நாள் சாதனையாளர்" விருது அறிவிக்கப்பட்டுள்ளது



Prof.Thirukural G.Baskaran, M.A, M.Sc, M.Phil, M.Ed, B.T.
Former Joint Director of Collegiate Education.

பேராசிரியர். திருக்குறள் க.பாஸ்கரன் அவர்கள் மறைந்த அவரது அருமை மகனார் திரு.கருணாகரன் அவர்கள் நினைவாக உருவாக்கியுள்ள 'கருணாகரன் நினைவு திருக்குறள் நூலகம்' சிறப்பாக செயல்படுகிறது.

சென்னை, அண்ணா சாலையில் உள்ள தனது இல்லத்தையே ஒரு நூலகமாக மாற்றி தமிழ் சேவை புரிந்து வருகிறார் பேராசிரியர் திருக்குறள் க.பாஸ்கரன். இந்த நூலகத்தின் சிறப்பு, இங்கு சேர்த்து வைக்கப்பட்டுள்ள திருக்குறள் தொடர்பான நூல்களே. திருக்குறளின் தலைப்பில் அடங்கிய பல வெளியீடுகள் இந்த நூலகத்தில் உள்ளன. திருக்குறள் ஆய்வு செய்ய விரும்புவோர் பயன் பெறும் வகையில் இந்த நூலகம் அமைந்துள்ளது. இந்த நூல்கள் சிறப்பாக கண்ணாடி அலமாரிகளுக்குள் அடுக்கி வைக்கப்பட்டு தூய்மையாக பேனப்படுகின்றன. இந்த நூலகம் ஒவ்வொரு வாரமும் சனிக்கிழமையும் ஞாயிற்றுக்கிழமையும் காலை 9:00 மணியிலிருந்து மாலை 06:00 மணி வரையில் தனது சேவையை வழங்கி வருகின்றது.

இவரது திருக்குறள் தொண்டைப் போற்றுவோம். இவருக்கு உலகத் திருக்குறள் முற்றோதல் இயக்கத்தின் "திருக்குறள் வாழ்நாள் சாதனையாளர்" விருது அறிவிக்கப்பட்டுள்ளது.

திருவள்ளுவர் திருநாள் நிகழ்ச்சிகள்

திருவண்ணாமலை திருக்குறள் சமுதாயம் சார்பில் (16.01.2024) 42-ஆம்ஆண்டு திருக்குறள் தேர்த்திருவீதி உலாவை பூவை.பி.தயாபரன் அவர்கள் தொடங்கி வைத்து உரையாற்றினார்...

தஞ்சை திருக்குறள் முற்றோதல் பயிற்றகத்தில் திருவள்ளுவர் நாள் விழா

தையூர், கேளம்பாக்கம், சென்னை, திருவள்ளுவர் திருநாள் விழா

தினத்தந்தி

மாணவ–மாணவிகளுக்கு பரிசு

அகழ் கலை மற்றும் இலக்கிய அறக்கட்டளை சார்பில் பெங்களூரு மகிழ்வகத்தில் திருவள்ளுவர் தினம் கொண்டாடப்பட்டது. இதில் திருக்குறளை மாணவ-மாணவிகள் தமிழ், ஆங்கிலம் மற்றும் கன்னட மொழிகளில் ஒப்புவித்தனர். திருவள்ளுவர் ஓவியம் வரைதல் போன்ற போட்டிகளில் பங்கேற்ற அனைவருக்கும் அகழின் கர்நாடக மாநில அமைப்பு செயலாளர் மா.வித்யா சான்றிதழ்களும், பரிசுகளும் வழங்கி ஊக்கப்படுத்தினார்.

பெங்களூரில் இனிதே கொண்டாப்பட்ட, திருவள்ளுவர் தின கொண்டாட்டம்...

திருவள்ளுவர் உருவம் வரைதல், வண்ணம் தீட்டுதல், ஆங்கிலம் மற்றும் கன்னடத்தில் திருக்குறள் சொல்லுதல் என்று மிக சிறப்பாக நடைபெற்றது.

ஆப்பிரிக்காவில் பேசப்படும் ஸ்வாஹிலி மொழியில் திருக்குறள் வெளியீடு

ஆப்பிரிக்காவில் பரவலாக பேசபடும் ஸ்வாஹிலி மொழியில் திருக்குறளை கென்யாவில் இருக்கும் ராஜா இளங்கோவன் மற்றும் கஷதூரி குமாரவேல் ஆகியோர் மொழிபெயர்த்து பாராளுமன்ற உறுப்பினர் எம். எம். அப்துல்லா அவர்களால் வெளியிடப்பட்டது.

விருதுநகர் மாவட்டம்

23.01.24 அன்று விருதுநகர் மாவட்டம் திருக்குறள் மாணவர் மாநாடு சார்பாக கன்னியாகுமரி முதல் சென்னை வரை மிதிவண்டி பயணதை முக்கடல் சங்கமிக்கும் கன்னியாகுமரியில் திருவள்ளுவர் சிலை அருகே காவல்துறையைச் சார்ந்த திரு. பிரவீன் கௌதம் மற்றும் திரு. சேதுராமலிங்கம், வருவாய்த்துறை அதிகாரி அவர்கள் தொடங்கி வைத்தார்கள்.

வேலூர் மாவட்டம்

வேலூர் திருவள்ளுவர் சேவா சங்கம் சார்பாக திருவள்ளுவர் திருநாள் விழா

கேரளத்தில் உள்ள திருக்குறள் ஞான மடம் போன்று தமிழ்நாட்டில் "திருக்குறள் வாழ்வியல் மன்றங்கள்" ஊரெங்கும் உருவாகுமா?

ஞாயிறு – 21.01.2024

கேரளத்தில் திருவள்ளுவர் கோயில்கள்!

திருவள்ளுவருக்கு தனிக் கோயில் சென்னை மயிலாப்பூரில் உள்ளது. ஆனால், கேரளத்தின் மூன்று மாவட்டங்களில் பல கோயில்கள் இருப்பதும், ஆதிக்கணக்கரோர் குலதெய்வமாக வழிபடுவதும் வியப்பில் ஆழ்த்துகிறது.

'பகவான் ஆதி திருவள்ளுவர் ஞானமடம்' என்ற அமைப்பின் தலைமையிடம் இடுக்கி மாவட்டத்துக்கு உள்பட்ட வண்டிபெரியாறு அருகே மகாதேவர் மலையில் உள்ளது. இங்குள்ள கருவறைக்குள் திருவள்ளுவர் படம். இங்கு வரும் வழிபாடுகளில் அடித்தட்டு மக்கள்...

இந்த ஞான மடத்தின் தலைவர் சிவனிடம் பேசினோம்.

"1974-ம் ஆண்டு வாய்ப்பு வசதி செய்த சிவனந்தம், புலவரை தெய்வமாக் தொட்டதில் வேலை செய்து வந்தார். அவரு தமிழ் நடத்தி வந்த ஒரு தேநீர் கடையில் பார்த்த இடமே, திருவள்ளுவர் படங்கள் கண்டு மாட்டப்பட்டிருந்ததையும், அவரின் படங்களின் கீழ் உலகைக் காத்தவர்கள்' என எழுதப்பட்டிருந்ததையும் கண்டார். தேநீர் கடைக்காரரிடம் திருவள்ளுவர் குறித்து விளக்கமும் கேட்டிருந்தார்.

சிவனந்தம் தனது நண்பர் ஐயப்பனுடன் தமிழ்நாட்டில் அரசு பேருந்துகளில் பயணிக்கும்போது, பேருந்துகளில் திருவள்ளுவர் படமும் அதன் கீழே திருக்குறள் எழுதியிருந்ததையும் பார்த்தார்.

இதனால் திருவள்ளுவர் மீது சிவனந்தத்துக்கு இனம் புரியாத ஈடுபாடு ஏற்பட்டது. வெண்கிருமம் கோபால குரு எனும் அமைப்பானது மலையாளத்தில் மொழிபெயர்த்த திருக்குறளைப் படித்து விளக்கமான அறிந்தார். சமூகப் புரட்சியாளர் ஸ்ரீநாராயண குருவும் மலையாளத்தில் எழுதிய திருக்குறளின் ஒரு பகுதி கிடைத்து.

அதன்பிறகு திருவள்ளுவரை ஞானகுருவாகவே சிவனந்தர் ஏற்று குறள் வழி நடந்தார். நூல்பயன், உலகப் பற்றை துறப்பதுமே அதன்படியே நடந்தன.

'ஞானமடம்' என்ற பெயரில் திருவள்ளுவருக்கு தனி கோயில் அமைக்கவும் முடிவு செய்தனர். அதற்கு ஐயப்பனும் தங்களிடம் தனது 27 வேட்டி நிலமாக எழுதி தந்தார். பின்னர், கோயில் உருவானது.

1975-ஆம் ஆண்டில் கோயிலில் திருவள்ளுவர் படத்தைக் கருவறையில் நுழைவாக வைத்து, திருக்குறளை மலையாள மொழியில் எழுதி வைத்து திருவிழாவை தொடங்கினர். அதன்பிறகு அவர்களின் குடும்பத்தில் பலரும் மலையாளத்தில் திருக்குறளை மொழிபெயர்த்து வருகின்றனர்.

கோட்டயம் எனுமிடத்தில் பல்வேறு இடங்களிலும் ஞானமடங்களைத் தோற்றுவித்தார் சிவனந்தம்.

இதில், கோட்டயம் எனுமிடத்தில் என மூன்று மாவட்டங்களில் முற்றுகை மேற்பட்ட சிறப்பங்களில் ஞான பீடங்கள் அமைக்கப்பட்டு, வழிபாடு நடத்தப்படுகிறது. இதற்கு பீடங்களை வழிநடத்தி வரும் சிவனந்தம் 101-ஆம் ஆண்டில் மறைந்தார். அவரது மகனுக்கும் மேலும் பல கோயில்களில் இன்றும் சிறப்பாக பூஜைகள் நடத்தப்பட்டு வருகின்றன.

மலையாள மாதத்தின் முதல் நாள் மட்டுமே வழிபாடு நடத்தப்படும். ஐயப்பி, கார்த்திகை மாதங்களில் பக்தர்கள் மாலை அணிந்திருப்பார்கள். அந்த நாள்களில் விரதம் இருந்து 41-ஆவது நாளில் இருமுடி கட்டி, 41-ஆவது நாளில் தலைமேல் வைத்து சிறுமலை ஏறுவார்கள். முடியாதவர்கள் அவர்களின் ஞானத்தில் இருந்தே நினைவு கொள்கின்றனர்.

விழாவில் தலைமையேற்று, அனைவரையும் திருவள்ளுவர் சொற்பொழிவுகள் இசைக் கச்சேரிகள் நடைபெற்று வருகின்றன.

கோரதம் இருந்து கோரிக்கை மலை கோரிக்கை இருந்து ஏறுவது கொடும் வழித்தடத்தில் அடையும் என்று இடத்தில் இருந்து, ராஜாவழி வழியாக சோறுடி கிராமத்துக்கு வரும். அடையில் இருந்து ஆண்கள் மற்றும் ராஜாவழி வரை சோறுடி வரை.

தமிழ்நாட்டில் இருந்து கேரள விருப்பம் தேவை கொடுத்தவர்களுக்கு, மேலும் பூப்பாளை சாதனம் பாரு வந்து வரை 3 கி.மீ தொலைவில் கோரிக்கை வரும். பூப்பாளையில் இருந்து மேற்கு வழிப்பாதை என்றார்.

இந்த கோயில்கள் குறித்து மடத்தில் அங்கம் வகிக்கும் சிவனந்தம் கேட்டபோது,

"எங்களுடைய அருவுருவ உருவமாகிய உள்ள கோயில் கருவறையில் திருவள்ளுவர் படம், சமூகத்தை வெளிக்கொண்டு வருவதற்காக...

அதன் அருகில் வாசகருவுருவத்தில் திருவள்ளுவரும் கொலுவிருக்கிறார். இந்த மலையில் உச்சியில் இருக்கக் கூடிய அதன் ரகசிய விடாக் கொடுப்பு நடைபெறுகிறது. இங்கிருந்து மலைகளைப் பார்த்தால் மலைப்பாக இருப்பது என் கோள்களுக்கிடையாக உள்ளது. அந்தப் பாதை நகரங்களைப் போன்ற முடிவு தற்போது எங்களுக்கு 40 கி.மீ தொலைவு இருந்தே வந்து கருவறைக்கு வரவேண்டும்.

கோட்டயம் தனிக் கருவேலான எட்டுமானூர் மகாதேவர் கோயில் இருந்து சுமார் இருமுடி 41 கி.மீ. தொலைவில் திருவள்ளுவர் கோயில் உள்ள ஞானமடம் அமைந்துள்ளது.

எட்டுமானூர் பேருந்து நிலையத்தில் இருந்து ஆட்டோ மற்றும் விருப்பம் திருவள்ளுவர் ஞானமடம் என்று சொன்னால் அழைத்து வந்துவிடுவர். இங்கு தினமும் இரண்டு வேளைகளும் தீபம் ஏற்றி வழிபாடு நடக்கிறது. ஒவ்வொருவருக்கும் திருக்குறள் வகுப்புகள், திருவள்ளுவர் மலையாளத்தில் தமிழ் வழிபாடு நடக்கிறது.

மலையாள மொழியில் குறளை ஒலி மாறாமல் எழுதி வைத்து, திருவள்ளுவரை திருக்குறளால் அர்ச்சனை செய்து வழிபடுகிறோம். ஆண்டுதோறும் ஆயிரக்கணக்கானோர் வருகை தருகிறார்கள். ஒவ்வொரு முறை வரும்போதும் ஒரு புதிய கோணத்தில் திருக்குறளை நாங்கள் புரிந்துகொள்கிறோம்" என்றார்.

எட்டுமானூரில் உள்ள பகவான் ஆதி திருவள்ளுவர் ஞானமடத்தின் பொறுப்பாளரிடம் பேசினோம்.

"வள்ளுவருக்கு ஆண்டவர் திருவள்ளுவர் கோயில் கட்டி நல்ல முறையில் நடைபெறுகிறது. இங்குள்ள உள்ள நாட்டு குடும்பங்கள் இந்த ஞானமடத்தில் பக்தர்களாக உள்ளனர். திருவள்ளுவர் சொற்பொழிவுகள், இசைக்கச்சேரிகள் ஆகியவைகளும் நடைபெறுகின்றன.

தமிழ்நாட்டில் இருந்து ஆறாவது கிடைத்தால் அவர் மலையாளத்தில் எழுதுவதற்கு நாங்கள் ஏற்பாடு செய்வோம். திருக்குறளை தமிழ் ஒலி மாறாமல் மலையாளத்தில் எழுதுவதால் பல வருடங்களாக விளங்குகிறோம். எங்கள் கடமைகளாக விளங்குவர் திருவள்ளுவர். அவரின் திருக்குறளே எங்களுக்கு நிரந்தரம்" என்றார்.

-பானையாரம் அதியமான்

இதுபோல் தமிழ்நாட்டிலும் திருக்குறள் வாழ்வியல் மன்றம் உருவாகி, கிராமம்தோறும், கல்வி நிறுவனங்கள், வணிக நிறுவனங்கள் தோறும் திருக்குறள் சிலை நிறுவி, திருக்குறளை மறையோதி, குறிப்பிட்ட நாட்களை திருக்குறள் வாழ்வியல் கருத்துகளை ஒவ்வொருவரும் உள்வாங்கவேண்டும் என்று ஒரு ஒழுங்கு செய்து 133 நாட்கள், 7 நாட்கள் என்று விருத்தம் எடுத்து, வள்ளுவ யாத்திரை செய்திருந்தால் ஒருவேளை தமிழர்கள் திருவள்ளுவரை வாழ்வியலில் அதில் உள்ள அறக்கருத்துகளை உள்வாங்கி இருப்பார்களோ?

திருக்குறள் மறையோதல்: (133 காணொளிகள்)

https://www.youtube.com/watch?v=45ZEg1ebp-k&list=PLXPD1_to_UjRHjPTTVdMxMlVtSfYiGuau

இளங்குமரனார் அவர்கள் இயற்றிய திருக்குறள் 108 போற்றி:

https://www.youtube.com/watch?v=m6OmQFlXtaQ&t=328s

நவில்தொறும் நூல்நயம்

திருக்குறள் நூல்கள் அறிவோம்









புதுச்சேரி அரசுக்கு உலகத் திருக்குறள் முற்றோதல் இயக்கம் கோரிக்கை.
புதுச்சேரி அரசு மடிக்கணினி வழங்கும் திட்டத்திற்கு வாழ்த்துகள்..

தமிழ்நாட்டைப் போலவே புதுச்சேரி அரசு மாணவர்களுக்கு மடிக்கணினி வழங்கும் திட்டத்தை அறிவித்துள்ளது வரவேற்கத்தக்கது. இதைத்தொடர்ந்து தமிழ்நாட்டில் மாணவர்களுக்கு திருக்குறள் முற்றோதல் செய்யும் மாணவர்களுக்கு ரூபாய் 15000 வழங்கி அரசு சான்றிதழ் வழங்கும் திட்டத்தையும் புதுச்சேரி மாணவர்கள் பயன்பெற புதுவை முதல்வர் ஆணை பிறப்பித்து முன்னெடுக்கவேண்டும். இது தொடர்பாக விரைவில் புதுவை முதல்வரை சந்தித்து உலகத் திருக்குறள் முற்றோதல் இயக்கம், புதுவைத் தமிழ்சங்கத்தின் மூலம் கோரிக்கை வைக்கவிருக்கிறோம்.

அரசுத் தொடர்பில் உள்ளவர்கள் இதை உரியவர்கள் கவனத்திற்கு கொண்டுசென்று செயல்படுத்த வழிவகை செய்யவேண்டுகிறோம். மாணவர்களுக்கு தனி பேருந்து போன்ற முன்னோடி மாணவர் நலன் போற்றும் திட்டங்கள் நடைமுறையில் உள்ள நிலையில் இது கவனத்தில் கொண்டுசென்றால் எளிதாக அறிவிப்பு வந்துவிடும்.

புதுவை உலகத் திருக்குறள் முற்றோதல் இயக்கத்தின் பயிற்சியாளர் திருமதி.சங்கீதா மற்றும் அவரின் வழிகாட்டலில் இயங்கும் ஆசிரியர்கள் ஏற்கனவே பல புதுவை சுற்றியுள்ள கிராமப்புற மாணவர்களுக்கு நேரில் பயணித்து திருக்குறள் முற்றோதல் வகுப்பு எடுக்கிறார்கள். அதை விரிவாக்க தமிழ்ச்சங்கக் கட்டிடம் உள்ளிட்ட சில இடங்களில் வார இறுதி நாட்களில் வகுப்பு எடுக்க திட்டமிடப்படுகிறது.

மாணவர்கள் பெருமளவு திருக்குறளை கையில் எடுத்துவிட்டார்கள். அரசு ஊக்கப்படுத்தினால் இது மேலும் வளர்ச்சியுறும். பரவலாக்கல் எளிதாகும்.

நாளொரு திருக்குறள் - நல்லதொரு பொருட்குறள்: நாளும் காணொளியாக வெளிவருகிறது.



கவிஞர் பா.செம்பையாவின் திருக்குறளும் பொருட்குறலும் நூல் வெளியீடு மிகச் சிறப்பாக நடைபெற்றது.

நாளொரு திருக்குறள் - நல்லதொரு பொருட்குறள் என்ற முழக்கத்துடன் கவிஞர் பா.செம்பையாவின் திருக்குறளும் பொருட்குறலும் - திருக்குறள் இசை உரை "பொருட்குறள் Porutkural" என்ற முகநூல் பக்கத்திலும், @PorutKural என்ற யூடூப் பக்கத்திலும் வெளிவருகிறது. கண்டு, கேட்டு பயன்பெறுங்கள். சுருக்கமான, தெளிவான விளக்கங்கள், நேர்த்தியான இசை.

சிவகங்கை மாவட்டம்

12.01.24 திருவள்ளுவர் தினத்தை (16.01.24) முன்னிட்டு சிவகங்கை மாவட்டம் பாகனேரி அருகே பனங்குடி ஆர்.சி. நடுநிலைப்பள்ளியில் தலைமையாசிரியர் எஸ்.மரியசெல்வம் சவரிராஜ் அவர்கள் தலைமையிலும், ஆசிரியர் பயிற்றுநர் புலவர் கா. காளிராசா ஐயா அவர்கள் முன்னிலையிலும் மாணவர்கள் அனைவருக்கும் திருக்குறளை வாழ்வியலாக்க வலியுறுத்தி, திருக்குறள் நூலை இலவசமாக நாம் வழங்கினோம். மேலும் குறள் சொன்ன மாணவர்களுக்கு பணப்பரிசையும் வழங்கினோம். - முத்தையா முருகேஸ்வரி

திருக்குறள் ஆர்வலர், மொழிபெயர்ப்பாளருக்கு எமது அஞ்சலி.

முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ.வி. மருமகன், இந்தியில் திருக்குறளை மொழி பெயர்தத அறிஞர் திரு.கண்ணன் காலமானார் ஐயாவை இழந்து வாடும் புவலர் குழு பொறுப்பாண்மைக் குழுத்தலைவர் மணிமேகலைக்கண்ணன் அவர்கட்கும் சுற்றத்தார்க்கும் புலவர் குழு உறுப்பினர்களுக்கும் எமது அஞ்சலியை தெரிவித்துக்கொள்கிறோம்.

புதிய முற்றோதல் மாவட்டப் பயிற்சியாளர்களுக்கு பயிற்சிக் கூட்டம் நடைபெற்றது

உலகத் திருக்குறள் முற்றோதல் இயக்கத்தின் நாமக்கல் மாவட்டம், பெரம்பலூர் மாவட்டத்திற்கான முற்றோதல் மாவட்டப் பயிற்சியாளர் பயிற்சிக் கூட்டம் இன்று நடைபெற்றது. பயிற்சிக் குழுவின் ஒருங்கிணைப்பாளர் பேராசிரியர் முனைவர். சண்முக சுந்தரம் அவர்கள் கலந்துகொண்டார்.

தமிழ்நாட்டின் ஒவ்வொரு மாவட்டத்திலும் அந்தந்த மாவட்டத்தை சார்ந்தவர்கள், திருக்குறள் படித்தவர்கள், பயிற்சியளிக்க ஆர்வமுள்ளவர்கள் முற்றோதல் பயிற்சியாளராக விரும்பினால் தொடர்புகொள்ளவும்.

தலைமைப் பயிற்சியாளர்களால் உரிய வழிகாட்டுதலும், பயிற்சியும் வழங்கப்படும். பயிற்சியாளர் பயிற்சிக்குழுவின் ஒருங்கிணைப்பாளராக பேராசிரியர் முனைவர். மோகனசுந்தரம் ஐயா அவர்கள் கோவையிலிருந்து பொறுப்பேற்றுள்ளார். இவர் நான்கு பொறியியல் கல்லூரியின் முதல்வராக இருந்து ஓய்வு பெற்றவர். அரசின் பல முக்கிய தொழில்நுட்பக் குழுக்களில் பங்காற்றியவர். திருக்குறளை முழுமையாக உள்வாங்கியவர்.

திருக்குறள் மக்களிடம் வாழ்வியலாக சென்றுசேர ஊர் கூடித் தேரிழுப்போம்.

- உலகத் திருக்குறள் முற்றோதல் இயக்கம்

திருக்குறள் தற்சார்பு

எங்கள் மாவட்டம்-எங்கள் பொறுப்பு, எங்கள் மாவட்டப் பயிற்சியாளர், எங்கள் மாவட்டத்தில் திருக்குறள் முற்றோதல் செய்த ஒருவருக்கு வேலை, எங்கள் மாவட்ட அறம்சார் புரவலர் திருக்குறளுக்கு முன்வருபவரை, அவரது வணிகத்தை நாங்கள் நாங்கள் முன்னிறுத்துவோம், எங்கள் மாவட்ட மாணவர்கள் பயன்பெறுகிறார்கள், எங்கள் மாவட்ட திருக்குறள் ஆளுமைகள் வழிகாட்டுகிறார்கள், எங்கள் மாவட்ட அரசு நிர்வாகத்துடன் இணைந்து அரசின் பரிசினைப் பெற அதிக மாணவர்கள் திருக்குறள் படிக்கிறார்கள், எங்கள் மாவட்டத்தில் படித்து வெளிநாடு சென்றவர்கள் எங்கள் மாவட்டத்தில் திருக்குறள் படித்தவர்களுக்கு கல்வி, வேலைவாய்ப்பு, வெளிநாட்டு மாணவர் பயணம் என்று பலவகையில் துணைநிற்கிறார்கள்.

திருக்குறள் புரவலராக உங்கள் மாவட்டத்தில்பொறுப்பேற்க அழைக்கிறோம்..

ஏற்கனவே பொறுப்பேற்றுள்ள புரவலர்களுக்கு நன்றி...!! நன்றி.. !!

உலகத் திருக்குறள் முற்றோதல் இயக்கம் நன்கொடை பெறுவதில்லை. செயல்பாடுகளை கண்டறிந்து அறம் சார்ந்த மனிதர்கள், நிறுவனங்கள் அந்தந்த மாவட்டத்திலிருந்து அவர்கள் சார்ந்த மாவட்டத்தின் புரவலர் பொறுப்பை ஏற்றுக்கொள்ளவேண்டும் என்று வலியுறுத்துகிறோம். மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்குதல், பரிசளித்தல், பகுதிநேர, முழுநேர திருக்குறள் முற்றோதல் பயிற்சியாளர்களுக்கு ஊக்கத்தொகையை நேரடியாக வழங்குதல் உள்ளிட்டவற்றிற்கு அந்தந்த மாவட்டத்திலிருந்து "திருக்குறள் புரவலர்கள்" தேவை.

Ariyalur அரியலூர் Your Photo / Business Photo	Chengalpattu செங்கல்பட்டு **மணி பெரியகருப்பன்,** Ohio, USA	Chennai சென்னை Your Photo / Business Photo	Coimbatore கோயம்புத்தூர் Your Photo / Business Photo
Cuddalore கடலூர் Your Photo / Business Photo	Dharmapuri தர்மபுரி Your Photo / Business Photo	Dindigul திண்டுக்கல் Your Photo / Business Photo	Erode ஈரோடு Your Photo / Business Photo

Kallakurichi கள்ளக்குறிச்சி Your Photo / Business Photo	Kanchipuram காஞ்சிபுரம் Your Photo / Business Photo	Kanyakumari கன்னியாகுமரி Your Photo / Business Photo	Karur கரூர் **க.செங்குட்டுவன்** Valluvar Science and Management College
Krishnagiri கிருஷ்ணகிரி Your Photo / Business Photo	Madurai மதுரை Your Photo / Business Photo	Mayiladuthurai மயிலாடுதுறை **ஜெனீபர் பவுல்ராஜ்**	Nagappattinam நாகப்பட்டினம் Your Photo / Business Photo
Namakkal நாமக்கல் Your Photo / Business Photo	Perambalur பெரம்பலூர் Your Photo / Business Photo	Pudukkottai புதுக்கோட்டை Your Photo / Business Photo	Ramanathapuram இராமநாதபுரம் Your Photo / Business Photo
Ranipet இராணிப்பேட்டை Your Photo / Business Photo	Salem சேலம் **தங்கராசு பெரியசாமி**	Sivagangai சிவகங்கை Your Photo / Business Photo	Tenkasi தென்காசி Your Photo / Business Photo
Thanjavur தஞ்சாவூர் Your Photo / Business Photo	The Nilgiris நீலகிரி Your Photo / Business Photo	Theni தேனி Your Photo / Business Photo	Thirupattur திருப்பத்தூர் Your Photo / Business Photo

Tiruvallur திருவள்ளூர் Your Photo / Business Photo	Tiruvannamalai திருவண்ணாமலை Your Photo / Business Photo	Tiruvarur திருவாரூர் திரு. இளங்கோ, சிங்கப்பூர்	Vellore வேலூர் Your Photo / Business Photo
Viluppuram விழுப்புரம் Your Photo / Business Photo	Virudhunagar விருதுநகர் Your Photo / Business Photo	Pondicherry புதுச்சேரி தலைவர், புதுவைத் தமிழ்ச்சங்கம்	Karaikkal காரைக்கால் Your Photo / Business Photo

திருக்குறளில் ஆர்வமுள்ளவரா? எமது செயல்பாட்டில், திருக்குறள் பரவலாக்கல் முயற்சியில் நம்பிக்கை உள்ளவரா? உங்கள் அறம் சார்ந்த வணிகத்தை விளம்பரம் செய்து பயனடைவீர். பல லட்சம் பேருக்குமேல் சமூக வலைத்தளங்கள் உள்ளிட்ட பல வழிகளில் பகிரப்படுகிறது.

தொடர்புக்கு: Kural.Murothal@gmail.com

வள்ளுவமும் வலைத்தமிழும்

வலைத்தமிழ் தனித்து அல்லது பிற அமைப்புகளுடன் இணைந்து முன்னெடுத்துள்ள திருக்குறள் சார்ந்த 24 பரவலாக்கல் திட்டங்களை ஒரே இடத்தில் காண: **www.Thirukkural.ValaiTamil.com**

திருக்குறள் நூல்கள் வழங்கிய மாவட்டங்களின் விவரம்

மாவட்டங்களுக்கு சுமார் 1000 திருக்குறள் நூல்கள் வரை அனுப்பப்பட்டு மாவட்ட அரசு நிர்வாகத்துடன் இணைந்து வழங்கப்பட்டது.

எண்	மாவட்டம்	நூல் வழங்கப்பட்டதா?	பயிற்சியாளர்
1	Dharmapuri தர்மபுரி	ஆம்	
2	Tiruvallur திருவள்ளூர்	ஆம்	
3	Tirunelveli திருநெல்வேலி	ஆம்	
4	Tiruvannamalai திருவண்ணாமலை	ஆம்	திரு .க.காமராசு
5	Kallakurichi கள்ளக்குறிச்சி	ஆம்	புலவர். ஐயா மோகன்
6	Cuddalore கடலூர்	ஆம்	
7	Chennai சென்னை	ஆம்	திரு. க.கோ.பழனி
8	Dindigul திண்டுக்கல்	ஆம்	திரு. வெ.செல்வன்
9	Karur கரூர்	ஆம்	
10	Mayiladuthurai - மயிலாடுதுறை	ஆம்	திரு. சரவணன்
11	Thanjavur தஞ்சாவூர்	ஆம்	திரு. கோபிசிங், திருமதி. ச.ஆனந்தி
12	Namakkal நாமக்கல்	ஆம்	திரு. க.காமராசு
13	Pondicherry - புதுச்சேரி	ஆம்	திருமதி. சங்கீதா கண்ணன்
14	Vellore வேலூர்	ஆம்	
15	Viluppuram விழுப்புரம்	ஆம்	
16	Kanyakumari கன்னியாகுமரி	ஆம்	கவிஞர். தமிழ்க்குழவி
17	Tiruchirappalli திருச்சி	ஆம்	
18	Tenkasi தென்காசி	ஆம்	திரு.ஸ்ரீ தர்
19	Pudukkottai புதுக்கோட்டை	ஆம்	திரு. தங்கமணி
20	Salem சேலம்	ஆம்	திரு. க.காமராசு
21	Thirupattur திருப்பத்தூர்	ஆம்	
22	Perambalur பெரம்பலூர்	ஆம்	
23	Ariyalur அரியலூர்	ஆம்	
24	The Nilgiris நீலகிரி	ஆம்	
25	Tiruvarur திருவாரூர்	நூல்சென்றது	
26	Madurai மதுரை	ஆம்	
27	Nagappattinam நாகப்பட்டினம்	நூல்சென்றது	
28	Ramanathapuram இராமநாதபுரம்	நூல்சென்றது	
29	Chengalpattuசெங்கல்பட்டு	ஆம்	திரு. த.தமிழ்மகிழ்நன்,திருமதி. கற்பகவள்ளி,திருமதி.சிந்தாமணி
30	Coimbatore கோயம்புத்தூர்	நூல்சென்றது	முனைவர்.மோகனசுந்தரம்
31	Tiruppur திருப்பூர்	நூல்சென்றது	
32	Kanchipuram காஞ்சிபுரம்	ஆம்	திரு. குறள்அமிழ்தன்,
33	Virudhunagar விருதுநகர்	ஆம்	
34	Theni தேனி	ஆம்	
35	Erode ஈரோடு	நூல்சென்றது	
36	Sivagangai சிவகங்கை	ஆம்	திரு. ஜெயம்கொண்டான்
37	Ranipet இராணிப்பேட்டை	நூல்சென்றது	
38	Thoothukudi தூத்துக்குடி	நூல்சென்றது	
39	Krishnagiri கிருஷ்ணகிரி	நூல்சென்றது	
40	Karaikal -காரைக்கால்	இல்லை	

திருக்குறள் புரவலர்களுக்கு நன்றி...

உலகத் திருக்குறள் முற்றோதல் இயக்கத்திற்கு ஒரு தமிழ் பேராசிரியரை தொடக்கத்தில் பகுதி நேரமாகவும், தேவையானால் முழு நேரமாகவும் வழங்கி, "குறள் வழி" திருக்குறள் மாத இதழ் அட்டைப்பட விளம்பரமாக மாதம் ரூபாய் **10000** வழங்கி ஆதரவு அளிக்கும் வள்ளுவர் அறிவியல் மற்றும் மேலாண்மைக் கல்லூரிக்கும், அதன் தாளாளர் திரு.செங்குட்டுவன் அவர்களுக்கும் உலகத் திருக்குறள் முற்றோதல் இயக்கத்தின் சார்பாக மனமார்ந்த நன்றியை தெரிவித்துக்கொள்கிறோம்.

இவ்விதழ் மாவட்ட ஒருங்கிணைப்பாளர்கள், பயிற்சியாளர்களுக்கு அச்சுப்பிரதியாக இலவசமாக சென்று சேரவேண்டும் என்று புரவலராக தன்னை இணைத்துக்கொண்ட நாமக்கல் நண்பர் திரு.கதிரவன் செழியன் அவர்களுக்கு உலகத் திருக்குறள் முற்றோதல் இயக்கத்தின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம். நன்றி... நன்றி...



இதுவரை உலக அளவில் திருக்குறளை முழுமையாகப் படித்து முற்றோதல் செய்துள்ளவர்கள் யார்? ஆவணப்படுத்த புதிய இணையதளம்..

2000 வது ஆண்டில் திருக்குறள் முற்றோதல் செய்யும் மாணவர்களுக்கு பரிசுத் தொகை வழங்கும் திட்டத்தை அரசு தொடங்கியது. கடந்த 23 ஆண்டுகளில் தமிழ்நாடு முழுதும் சுமார் 812 பேர் 1330 திருக்குறளையும் கூறி பரிசு பெற்றுள்ளார்கள் என்று தமிழ் வளர்ச்சித்துறை இயக்குநர் முனைவர்.அவ்வை அருள் தெரிவித்துள்ளார். 14.04.1972 முதல் இயங்கிவரும் திருச்சி திருமூலநாதன் அறக்கட்டளை 01.05.1998 முதல் 26 ஆண்டுகளாக திருக்குறள் ஒப்பிடுதல் போட்டியை நடத்திவருகிறது. அவர்கள் வழங்கும் 2000 ருபாய் பரிசைப் பெற்றவர்கள் 400 பேருக்கு மேல் உள்ளனர். இதுபோல் வேறு அமைப்புகளும் செய்துகொண்டிருக்கலாம். அமெரிக்கா உள்ளிட்ட வெளிநாடுகளில் முற்றோதல் செய்தவர்கள் பலர் உள்ளனர்.

இவர்களை ஒரு குழுமமாக தொகுத்து வெளியிடுவதும், இவர்களுக்கு அனைத்திலும் தமிழ்ச்சமூகம் கல்வி, வேலைவாய்ப்பு, மேடைவாய்ப்பு, பொருளாதார வாய்ப்பு, தொழில் உள்ளிட்ட அனைத்திலும் முன்னுரிமை வழங்கவும் உலகத் திருக்குறள் முற்றோதல் இயக்கம் ஒரு சிறப்பு இணையதள வசதியை ஏற்படுத்தி ஆவணப்படுத்தி வெளியிடுகிறது. உங்களுக்குத் தெரிந்தவர்களை பதிவு செய்ய இங்கு செய்யவும்.

முதல்கட்டமாக இவர்கள் அனைவர்க்கும் உலகத்திருக்குறள் முற்றோதல் இயக்கம் சார்பில் திருக்குறள்-இளநிலை சான்றிதழ் வழங்கி, பொருள் உணர்ந்து படித்துள்ளவர்களை அடையாளம் கண்டு திருக்குறள்-முதுநிலை சான்றிதழ் வழங்கவிருக்கிறோம். இளநிலை முடித்தவர்கள் , முதுநிலை படிக்க ஊக்குவிக்கப்படுகிறார்கள்.

https://www.valaitamil.com/mutrothal-students-register-list.php

or www.Thirukkural.ValaiTamil.com

திருக்குறள் பொது நிகழ்வுகள்

அயலகத் தமிழர் நாள் விழாவில் உலகத் திருக்குறள் முற்றோதல் இயக்கம்

தமிழ்நாடு அரசு நடத்திய அயலகத் தமிழர் நாள் விழாவில் ஹார்வார்ட் தமிழ்ருக்கை புரவலர் மருத்துவர். விஜய் ஜானகிராமன் அவர்கள் உரையில் உலகத் திருக்குறள் முற்றோதல் இயக்கத்துடன் இணைந்து தமிழ்நாட்டின் 38 மாவட்டங்கள் , புதுச்சேரி மற்றும் காரைக்கால் என்று 40 இடங்களுக்கும் ஆண்டுக்கு 80000 திருக்குறள் நூல்கள் வழங்கும் திட்டம் குறித்து குறிப்பிட்டார்.

https://www.youtube.com/watch?v=5Sjpce_9df8

அறிந்தவர்கள் தொடர்புகொள்ளவும் ...

திருக்குறளை அனைத்து மொழிகளிலும் மொழிபெயர்க்கபடவேண்டிய பட்டியலில் சேர்த்ததற்கு யுனெஸ்கோ பாராட்டுக்குரியது என்று முனைவர் கிருஷ்ணா ராவ், என்பவர் சென்னை பல்கலைக்கழகத்தின் நூலக அறிவியல் துறை பேராசிரியர் 1962 ஆம் ஆண்டு எழுதியுள்ளார்.

இதன்மூலம் யுனெஸ்கோ அந்த ஆண்டு வாக்கில் ஒரு அறிக்கையில் திருக்குறளை முக்கியப்படுத்தி பட்டியலில் சேர்த்துள்ளது என்பது தெளிவாகிறது. இதுகுறித்து அறிந்தவர்கள், யுனெஸ்கோ அறிக்கையின் நகலை பெற உதவ முடிந்தவர்கள் தொடர்பில் வரவும். திருக்குறளை "Literary heritage of mankind" என்று கொண்டுசெல்ல அமைக்கப்பட்டுள்ள குழுவிற்கு உதவ இது மிகவும் பயன்படும்.

தொடர்பு: Thirukkural@ValaiTamil.com

"குறள் வழி" முந்தைய இதழ்களை வாசிக்க

குறள் வழி - மாத மின்னித...
January 31, 2024

குறள் வழி - மாத மின்னித...
December 23, 2023

குறள் வழி - மாத மின்னித...
November 9, 2023

குறள் வழி - மாத மின்னித...
October 10, 2023

https://issuu.com/kuralvazhi

https://www.valaitamil.com/literature_thirukkural_kural-vazhi/

THIRUKKURAL CHANTING
திருக்குறள் மறை ஓதல்
பிறந்தநாளை தமிழில் பாடி கொண்டாடுவோம்..
நீண்ட நீண்ட காலம்... எனத் தொடங்கும்
தமிழ் பிறந்தநாள் பாடல்..
பாடல் : பாவலர் அறிவுமதி
இசை : அரோல் கரோலி
குரல் : உத்தரா உன்னிகிருஷ்ணன்
தயாரிப்பு : வலைத்தமிழ் ச.பார்த்தசாரதி
நல்ல தமிழ்ப்பெயரை பிள்ளைகளுக்கு சூட்டுவோம்
உலகத் தமிழ்ப்பெயர்கள் பேரியக்கம்
www.BabyName.ValaiTamil.Com || BabyName.ValaiTamil@gmail.com

வலைத்தமிழ்
eStore.ValaiTamil.com
BUY NOW
சூட்டி மகிழ்வோம்
தூய தமிழ்ப்பெயர்கள்
தமிழியக்கம் வெளியிட்ட
"சூட்டி மகிழ்வோம் தூய தமிழ்ப்பெயர்கள்"
நூல் இனி எளிதாக இணையத்தில் கிடைக்கும்.
சால்வைகளுக்கும், பூங்கொத்துகளுக்கும், பரிசுப்பொருள்களுக்கும் பதிலாக திருமணங்களில் இந்நூலை பரிசளியுங்கள்..
நல்ல தமிழ்ப்பெயரை பிள்ளைக்கு சூட்டுவோம்..
இணையத்தில் பெற
www.eStore.ValaiTamil.com

வள்ளுவர்

அறிவியல் மற்றும் மேலாண்மைக் கல்லூரி

மாறுதலான பல்கலைக்கழகத்தின் இணைவு பெற்றது

தேசிய தர நிர்ணயக் குழுவின் A+ சான்றிதழ் பெற்றது. (முதல் சுழற்சி)

கரூர் – மதுரை தேசிய நெடுஞ்சாலை, புகாம்பூர் அஞ்சல், கரூர் மாவட்டம், தமிழ்நாடு – 639003

2(f) & 12(B) status by UGC

குறள் சொல்வோம்..!
குறள் வழி வாழ்வோம்..!

A+ GRADE ACCREDITED BY NAAC

AICTE

மாணவ- மாணவியர்களுக்கு ஓர் இனிய செய்தி

2024-2025 ஆம் கல்வியாண்டில் நமது வள்ளுவர் கல்லூரியில் சேரும் மாணவ மாணவியர்களுக்கு மூன்றாண்டுகளுக்கும் இலவசக் கல்வி!

- 500 திருக்குறள்களை ஒப்புவித்தால் ஒரு வருடம் கல்லூரிக் கட்டணம் இலவசம்.
- 1000 திருக்குறள்களை ஒப்புவித்தால் இரண்டு வருடம் கல்லூரிக் கட்டணம் இலவசம்.
- 1330 திருக்குறள்களை ஒப்புவித்தால் மூன்றாண்டும் கல்லூரிக் கட்டணம் இலவசம்.

COURSES OFFERED

UNDER GRADUATE PROGRAMMES:

- B.A. English
- B.A. Tamil
- B.A. Public Administration
- BBA
- B.Com
- B.Com. (Computer Applications)
- B.Com. (Professional Accounting)
- BCA
- B.Sc. Computer Science
- B.Sc. Fashion Technology & Costume Designing
- B.Sc. Hotel Management & Catering Science
- B.Sc. Mathematics
- B.Sc. Physics

POST GRADUATE PROGRAMMES:

- M.A. English
- M.Com. (Computer Applications)
- M.Sc. Computer Science
- M.Sc. Mathematics

RESEARCH PROGRAMMES:

- M.Phil. Commerce
- Ph.D. Commerce

DIPLOMA COURSES:

- Diploma in Food Production
- Diploma in Banking & Finance

PROFESSIONAL PROGRAMME

- M.B.A

@ valluvarcollege @VCSM Events www.vcsm.ac.in 9944450507 / 9791726481 / 9791736481